ICSF வழிகாட்டி



# மீன்பிடித் தொழிலில் வேலை நடைமுறை பற்றிய பொதுப்புரிதல் உடன்படிக்கை, 2007

மீனவத் தொழிலாளர்களுக்கான
சர்வதேச ஆதரவுக் குழு
www.icsf.net




ICSF வழிகாட்டி





# மீன்பிடித் தொழிலில் வேலை நடைமுறை பற்றிய பொதுப்புரிதல் உடன்படிக்கை, 2007



மீனவத் தொழிலாளர்களுக்கான
சர்வதேச ஆதரவுக் குழு
www.icsf.net

**ICSF வழிகாட்டி :**
மீன்பிடித் தொழிலில்
வேலை நடைமுறை
பற்றிய பொதுப்புரிதல்
உடன்படிக்கை, 2007

**வெளியிடுவோர் :**
மீனவத் தொழிலாளர்களுக்கான
சர்வதேச ஆதரவுக் குழு **(ICSF)**
27கல்லூரி சாலை, சென்னை 600 006, இந்தியா
தொலைபேசி: (91) 44–2827 5303
தொலைநகலி: (91) 44–2825 4457
மின்னஞ்சல்: icsf@icsf.net

**மொழியாக்கம்**
உஷா

**படங்கள்**
சந்தேஷ் (sandeshcartoonist@gmail.com)

ISBN 978-93-80802-16-9
© ICSF 2013

# மீன்பிடித் தொழிலில் வேலை நடைமுறை பற்றிய பொதுப்புரிதல் உடன்படிக்கை, 2007

சர்வதேச தொழிலாளர் அமைப்பின் (International Labour Organization -ILO) 96-வது சர்வதேச தொழிலாளர் மாநாடு (International Labour Conference - ILC) ஜூன் 2007ல் சுவிட்சர்லாந்தின் ஜெனிவா நகரில் நடைபெற்றது. மீன்பிடித் தொழிலில் வேலை நடைமுறை பற்றிய பொதுப்புரிதல் உடன்படிக்கை 2007 (Work in Fishing Convention, 2007) அந்த மாநாட்டில் ஏற்றுக்கொள்ளப்பட்டது. அந்த பொதுப்புரிதல் ஒப்பந்தம் பற்றிய விரைவான ஒரு பார்வை அளிப்பதற்கு இந்த வழிகாட்டி நூல் முயற்சிக்கிறது. பொதுப்புரிதல் ஒப்பந்தத்தின் வாசகங்கள் எந்த ஒன்றிற்கும் விளக்கம் அளிப்பதற்கு இந்த வழிகாட்டி முயற்சி எடுக்கவில்லை. பொதுப்புரிதல் ஒப்பந்ததின் எந்தவொரு வாசகத்திற்கும் பதிலாக இதில் உள்ள வாசகங்களைக் கொள்ளக் கூடாது. பொதுப்புரிதல் ஒப்பந்தம், ILO மற்றும் ILCயின் வேலை நடைமுறைப் பற்றிய விவரம் அறியாதவர்கள் சம்பந்தப்பட்ட விஷயங்கள் குறித்து ஓரளவு புரிதலை எட்டுவதற்கு உதவி செய்வதே இந்த வழிகாட்டு நூலின் நோக்கமாகும். பாரம்பரிய மீனவர்களுக்கும் சிறுவீத மீன்பிடியில் ஈடுபட்டுள்ளோர்களுக்கும் இந்தப் பொதுப்புரிதல் உடன்படிக்கை என்ன பலன்களைச் சாத்தியமாக்கக்கூடும் என்பதை மீனவ தொழிலாளர்களும் அவர்களின் அமைப்புகளும் புரிந்துகொள்ள இந்த வழிகாட்டு நூல் உதவியாக இருக்கும் என்று நம்புகிறோம்.



# உள்ளடக்கம்


1. **அறிமுகம்**
   * மீன்பிடித் தொழிலில் வேலை நடைமுறை பற்றிய பொதுப்புரிதல் உடன்படிக்கை, 2007 என்றால் என்ன? ............................................11

2. **சர்வதேச தொழிலாளர் அமைப்பு (ILO)**
   * சர்வதேச தொழிலாளர் அமைப்பு என்றால் என்ன? ..........................14
   * ILO என்ன செய்கிறது? ....................................................................15
   * ILO-வின் நிறுவனக் கட்டமைப்பு என்ன? ..........................................16
   * ILOவின் முத்தரப்பு கட்டமைப்பு (tripartite structure) என்றால் என்ன?17
   * எவ்வகை ஆவணங்களைக் (Instruments) கொண்டு தொழிலாளர் நிலைமைகளை மேம்படுத்த ILO முயல்கிறது? ...................................18
   * ஒரு பொதுப்புரிதல் உடன்பாட்டை அல்லது பரிந்துரையை ILO எவ்வாறு நிறைவேற்றுகிறது? ...................................................19

3. **ILOவும் மீன்பிடித் துறையும்**
   * மீன்பிடித் துறையில் ILOவின் ஈடுபாடு என்ன? .................................22
   * மீன்பிடித்துறையில் புதிய தொழிலாளர் தரநிர்ணயங்களை முன்னுக்குக் கொண்டுவர ILO என்ன செய்திருக்கிறது? .....................25

4. **மீன்பிடித் தொழிலில் வேலை நடைமுறை பற்றிய பொதுப்புரிதல் உடன்படிக்கை, 2007**
   * மீன்பிடித் தொழிலில் வேலை நடைமுறை பற்றிய பொதுப்புரிதல் உடன்படிக்கை, 2007ன் முக்கியத்துவம் என்ன? .................................28
   * மீன்பிடித் தொழிலில் வேலை நடைமுறை பற்றிய பொதுப்புரிதல் உடன்படிக்கை, 2007ன் பிரதான இலக்குகள் என்ன? ........................29
   * இந்த இலக்குகளை எட்டுவதற்காக இந்த பொதுப்புரிதல் உடன்படிக்கையில் குறிப்பாக சொல்லப்பட்டுள்ளவை யாவை?......... 31
   * மீன்பிடித் தொழிலில் வேலை நடைமுறை பற்றிய பொதுப்புரிதல் உடன்படிக்கை, 2007ன் கட்டமைப்பு என்ன? ....................................33
   * முன்னோக்கிய நடைமுறைபடுத்துதல் (progressive implementation) அணுகுமுறை என்றால் என்ன? ........................................................33

5. பாரம்பரிய மற்றும் சிறுவீத மீன்பிடி (Artisanal and Small-scale Fishing)

* சிறுவீத மீன்பிடியிலும் தொழிலாளர் தர நிர்ணயங்களைக் கருத்தில் கொள்வது முக்கியத்துவம் வாய்ந்ததாக இருப்பது ஏன்? ....................38

* பாரம்பரிய மீனவர்களும் சிறு வீத மீன்பிடியில் ஈடுபட்டுள்ள படகுகளும் மீன்பிடித் தொழிலில் வேலை நடைமுறை பற்றிய பொதுப்புரிதல் உடன்படிக்கை, 2007-னால் எவ்வாறு பயனடைவார்கள்? ..................39

* மீன்பிடித் தொழிலில் வேலை நடைமுறை பற்றிய பொதுப்புரிதல் உடன்படிக்கை, 2007 அனைத்துவிதமான மீனவர்களுக்கும் மீன்பிடிப் படகுகளுக்கும் பொருந்துமா? ..........................................40

* கரையிலிருந்து மீன் பிடிக்கும் அனைவருக்கும் மீன் தொழிலில் வேலை நடைமுறை பற்றிய பொதுப்புரிதல் உடன்படிக்கை, 2007 பயன் தருவது எவ்வாறு? ........................................................42

* மீன்பிடித் தொழிலில் வேலை நடைமுறை பற்றிய பொதுப்புரிதல் உடன்படிக்கை, 2007 மூலம் மீனவர்களுக்கு என்னென்ன பலன் கிடைக்குமோ அவற்றையொத்த பலன்களை கடற்கரையில் மீன் பிடிக்கும் மீனவர்களுக்கும் கிடைக்கச் செய்ய மீனவ மற்றும் சமூக அமைப்புகள் என்ன செய்யலாம்? ....................................................42

6. முன்னே உள்ள பாதை

* மீன்பிடித் தொழிலில் வேலை நடைமுறை பற்றிய பொதுப்புரிதல் உடன்படிக்கை, 2007னை நிறைவேற்றவும் அதனை நடைமுறைபடுத்தவும் உறுப்பு நாடுகள் செய்ய வேண்டும் என்று எதிர்பார்க்கப்படுபவை என்னென்ன? .............................................45

* மீன்பிடித் தொழிலில் வேலை நடைமுறை பற்றிய பொதுப்புரிதல் உடன்படிக்கை, 2007ன் வாசகங்களை வளரும் நாடுகள் நடைமுறைபடுத்த ஏதேனும் சிறப்பு ஏற்பாடுகள் இருக்கின்றனவா?.....46

* மீன்பிடித் தொழிலில் வேலை நடைமுறை பற்றிய பொதுப்புரிதல் உடன்படிக்கை, 2007 நடைமுறைபடுத்தப்படுவதை உறுதி செய்ய மீனவ அமைப்புகளும் சமூக அமைப்புகளும் என்ன செய்யலாம்? .......46

7. நிறைவுரை

* இறுதியாக சில கருத்தாக்கங்கள்.......................................................50

# அறிமுகம்


நல்வரவு!
சமூகப் பாதுகாப்பு
மருத்துவ சேவை
பணியிடப் பாதுகாப்பு
உணவு மற்றும் தண்ணீர்
பணிக்கமர்த்துதல்
பணிநிலைமைகள் போதுமானதாக இருப்பது
கீழ்படுதல் மற்றும் அமலாக்கலாக்கம்

## மீன்பிடித் தொழிலில் வேலை நடைமுறை பற்றிய பொதுப்புரிதல் உடன்படிக்கை, 2007 என்றால் என்ன?

அரசுகள், தொழிலாளர்கள், முதலாளிகள் ஆகிய முத்தரப்பின் பிரதிநிதிகளும் சர்வதேச தொழிலாளர் அமைப்பின் சர்வதேச தொழிலாளர் மாநாட்டில் கூடி மீன்பிடித் துறையில் புதிய தர நிர்ணயங்களை உருவாக்கினார்கள். அதனையே மீன்பிடித் தொழிலில் வேலை நடைமுறை பற்றிய பொதுப்புரிதல் உடன்படிக்கை, 2007 என்று அழைக்கிறோம்.

“தங்கி மீன்பிடிக்கும் தொழிலாளர்கள் பணிசெய்வதற்கு ஏற்கத்தக்க நிலைமைகளைப் பெற்றிருப்பது (decent conditions of work on board), பணி நிலைமைகள் போதுமானதாக இருப்பது (conditions of service), உணவு, தங்குமிடம் கிடைப்பது, பணியிடப் பாதுகாப்பு (occupational safety) மற்றும் ஆரோக்கியம், மருத்துவ சேவை மற்றும் சமூகப் பாதுகாப்பு ஆகியவை தங்கி மீன்பிடிக்கும்தொழிலாளர்களுக்கு உறுதி செய்வது” என்பதான் பொதுப்புரிதல் உடன்படிக்கையின் நோக்கமாகும். தாய்நாட்டுக்குத் திருப்பியனுப்புவது, வேலையில் சேர்ப்பது, கடலில் இருக்கும்போது கிடைக்கும் மருத்துவ சேவை, பணியிட மற்றும் மருத்துவப் பாதுகாப்பு, சமூகப் பாதுகாப்பு, சட்டங்களைப் பின்பற்றுவது மற்றும் நடைமுறைபடுத்துவது ஆகிய தற்போதைய ஆவணங்களால் உள்ளடக்கப்படாத அம்சங்கள் இந்த பொதுப்புரிதல் உடன்படிக்கையில் உள்வாங்கப்பட்டு குறிப்பிடப்பட்டுள்ளன.

இந்த பொதுப்புரிதல் உடன்படிக்கை கலங்களைப் பதிவு செய்துள்ள நாடுகளை (Flag States) இலக்காகக் கொள்கிறது. மீன்பிடிக் கலங்கள் எங்கே மீன்பிடித்தாலும், பதிவு செய்யப்பட்ட நாட்டின் அதிகார எல்லைக்குக் கட்டுப்பட்டதாகவே இருக்கும். மேலும் இந்தப் பொதுப்புரிதல் ஒப்பந்தம், மீன்பிடிக் கலம் எந்த நாட்டைச் சேர்ந்ததாக இருந்தபோதும், வந்தடைகிற மீன்பிடிக் கலத்தினை தன் அதிகார எல்லைக்குள் கட்டுப்படுத்தும் துறைமுக நாடுகளையும் (Port States) கட்டுப்படுத்தக் கூடிய சட்ட வாசகங்களைக் கொண்டிருக்கிறது.

# சர்வதேச தொழிலாளர் அமைப்பு (ILO)


தொழிலாளர்கள்
வேலையளிப்பவர்கள்
ILC
அரசு

## சர்வதேச தொழிலாளர் அமைப்பு என்றால் என்ன?

தொழிலாளர் உரிமைகள் தொடர்பான சர்வதேச தரநிர்ணயம், பணி நிலைமைகள் போன்றவை, சம வாய்ப்பு, சமூகப் பாதுகாப்பு, நிர்ப்பந்தத்தின் கீழ் உழைப்பது, சங்கம் அமைக்கும் உரிமை, குறைந்தபட்ச வயது நிர்ணயம் போன்ற தொழிலாளர் தொடர்பான பிரச்சனைகளுக்காக ஐக்கிய நாடுகள் சபை உருவாக்கியுள்ள தனிச்சிறப்பான அமைப்பே சர்வதேச தொழிலாளர் அமைப்பாகும் (ILO).

முதல் உலக யுத்தம் முடிவுற்ற பின்னர், ILO 1919-ல் அமைக்கப்பட்டது. உழைக்கும் மக்கள் கௌரவமான வகையில் நடத்தப்பட்டால் மட்டுமே அனைவருக்குமான நிலைத்த அமைதியை உருவாக்க முடியும் என்ற கருத்தாக்கத்தின் அடிப்படையில் ILO உருவாக்கப்பட்டது. 1946-ல், ஐக்கியநாடுகள் சபையின் தனித்ததொரு துறையைப் பார்க்கும் முதல் நிறுவனமாக ILO ஆனது. ஐநா-விற்கு முந்தைய முதல் உலக நாடுகள் அவையை (League of Nations) உருவாக்கக் காரணமான வெர்செயில்ஸ் உடன்படிக்கையின்படி (Treaty of Versailles) உருவாக்கப்பட்ட தனிச்சிறப்பு அமைப்புகளில் இன்றுவரை நீடிக்கும் அமைப்பு என்ற சிறப்பும் ILO-வுக்கு உண்டு. 1969-ல், ILOவின் 50 ஆண்டு நிறைவின்போது அந்த அமைப்புக்கு அமைதிக்கான நோபல் பரிசு அளிக்கப்பட்டது.

சுதந்திரமான, சமத்துவமான, பாதுகாப்பான, மனித கௌரவத்திற்கு உகந்த நிலைமையில், கௌரவமானதும் பலன்தருவதுமான வேலை ஆணுக்கும் பெண்ணுக்கும் கிடைப்பதற்கான வாய்ப்புகளை மேம்படுத்துவதற்காக ILO தன்னை அர்ப்பணித்துக் கொண்டுள்ளது. பணியிட உரிமைகள், கௌரவமான வேலை வாய்ப்புகளை உருவாக்குதல், சமூகப்பாதுகாப்பை மேம்படுத்துவது, பணி தொடர்பான பிரச்சனைகளில் கருத்துப் பரிமாற்றத்தைப் மேம்படுத்துவது ஆகியவை ILO-வின் முக்கியமான நோக்கங்கள் ஆகும்.

சமூக நீதியையும், சர்வதேச அளவில் அங்கீகரிக்கப்பட்ட மனித உரிமைகள், தொழிலாளர் உரிமைகளையும் மேம்படுத்துவதின் மூலம் 'தொழிலாளர் அமைதியே வளத்திற்கான வழி' என்ற தனது நிறுவனத்தின் பணியை ILO விடாது செய்துவருகிறது. தொடரும் அமைதி, வளம், முன்னேற்றம் ஆகியவை

தொழிலாளர்களுக்கும், தொழிலில் ஈடுபட்டுள்ளோருக்கும் கிட்டும் வகையில் கௌரவமான வேலை மற்றும் பொருளாதார மற்றும் பணி நிலைமைகள் முன்னேற்றம் அடைவதற்கு ILO பணிபுரிந்து வருகிறது.

ILOவின் உறுப்பினர்களாக அரசுகள் உள்ளன. 2007 டிசம்பர் 20 அன்று நிலவரப்படி, ILO-வில் 181 நாடுகள் அங்கத்தினர்களாக உள்ளனர்.

## ILO என்ன செய்கிறது?

பொதுப்புரிதல் உடன்படிக்கைகள், பரிந்துரைகள் என்ற வடிவத்தில் சர்வதேச குறைந்தபட்ச தொழிலாளர் (உரிமைக்கான) தரநிர்ணயங்களை ILO உருவாக்குகிறது. அவை பின்வருமாறு: அடிப்படை தொழிலாளர் உரிமைகள், சங்கம் அமைக்கும் உரிமை, அமைப்பாகும் உரிமை, கூட்டுப்பேர உரிமை, நிர்ப்பந்தத்தின் கீழான உழைப்பை ஒழித்தல், அவர்களுக்கான வாய்ப்புகளிலும் நடத்தப்படும் விதத்திலும் சம வாய்ப்பு இவற்றுடன் பணி தொடர்பான பிரச்சனைகள் அனைத்திலும் தரநிர்ணயங்களை உருவாக்குவது.

பணிநேரத்தைக் கட்டுப்படுத்துவது, தொழிலாளர்கள் நோய்வாய்படுவது, சுகவீனமடைவது, பணியினால் காயமேற்படுவது ஆகியவற்றிலிருந்து பாதுகாப்பது, குழந்தைகளைப் பாதுகாப்பது, வயதான காலத்தில் வாழ்க்கை நடத்துவதற்கு மற்றும் காயங்களுக்கு சிகிச்சை செலவேற்பது, தங்களின் தாயகம் தவிர்த்த நாடுகளில் தொழிலாளர்கள் பணியாற்றும்போது அவர்களின் நலனைக் காப்பது, தொழிலாளர்களின் சமூகப் பாதுகாப்பை உறுதி செய்வது ஆகியவை உள்ளிட்ட வழிமுறைகள் மூலம் தொழிலாளர் நிலைமைகளை முன்னேற்ற ILO பாடுபடுகிறது.

முதன்மையாகப் பார்க்கும்போது பின்வரும் தளங்களில் ILO தொழில்நுட்ப உதவிகளை அளிக்கிறது:

- தொழில் பயிற்சி மற்றும் மறுவாழ்வு தொழிற்பயிற்சி (vocational training and vocational rehabilitation);
- பணியளிப்பு கொள்கை (employment policy);
- தொழிலாளர் நிர்வாகம் (labour administration);

- தொழிலாளர் சட்டங்கள் மற்றும் தொழிற் கொள்கை (labour law and industrial relations);
- பணி நிலைமைகள் (working conditions);
- மேலாண்மை முன்னேற்றம் (management development);
- கூட்டுறவு
- சமூகப் பாதுகாப்பு
- தொழிலாளார் குறித்த புள்ளிவிவரம்
- பணியிடப் பாதுகாப்பு மற்றும் ஆரோக்கியம் (occupational safety and health)

சுதந்திரமான வேலையளிப்பவர்கள் மற்றும் தொழிலாளர்கள் சங்கங்களை வளர்க்க ILO முயற்சி எடுக்கிறது. அந்த அமைப்புகளுக்கு பயிற்சிகள் அளிப்பதுடன் ஆலோசனைகள் வழங்கவும் செய்கிறது. ஐக்கிய நாடுகள் சபை கட்டமைப்பில் ILO தனித்துவம் வாய்ந்த முத்தரப்பு கட்டமைப்பு ஒன்றைக் கொண்டுள்ளது. தொழிலாளர்களும், வேலையளிப்போரும் அரசாங்கத்துடன் சமத்துவமான முறையில் இந்த அமைப்பின் நிர்வாக கட்டமைப்பில் பங்கெடுக்கின்றனர்.

## ILOவின் நிறுவன கட்டமைப்பு என்ன?

சர்வதேச தொழிலாளர் மாநாடு (International Labour Conference-ILC), நிர்வாகப் பேரவை (Governing Body-GB)  சர்வதேச தொழிலாளர் அலுவலகம் (International Labour Office) என்று மூன்று உறுப்புகளைக் கொண்டதாக ILO இருக்கிறது.

வழக்கமாக, சர்வதேச தொழிலாளர் நாடாளுமன்றம் என்று அழைக்கப்படுகின்ற ILC ஒவ்வொரு ஆண்டும் ஜூன் மாதத்தில் ஜெனிவாவில் கூடுகிறது. இரண்டு அரசுப் பிரதிநிதிகள், ஒரு வேலையளிப்பவர், ஒரு தொழிலாளி என மூவரும் ஒரு உறுப்பு நாட்டின் பிரதிநிதியாக இந்த மாநாட்டில் கலந்துகொள்வார்கள். ILC மாநாட்டில், சர்வதேச தொழிலாளர் தர நிர்ணயங்கள் உருவாக்கப்பட்டு ஏற்றுக்கொள்ளப்படுகின்றன. பொதுப்புரிதல் உடன்படிக்கைகள், பரிந்துரைகள் ஒரு நாட்டின் அளவில் நடைமுறைபடுத்தப்பட்டது பற்றியும் இந்த மாநாடு கண்காணிக்கிறது. ஒவ்வொரு ILC மாநாட்டின் விவாதப்பொருளையும் பொதுக்குழு (GB)  தீர்மானிக்கிறது.

ILOவின் நிர்வாக குழுவாக GB இருக்கிறது. இதுதான் உயர்ந்தபட்ச அதிகாரம் கொண்ட அமைப்பாகும். அது சர்வதேச தொழிலாளர் தரநிர்ணயங்கள் நடைமுறை படுத்தப்பட்டதைக் கண்காணிக்கிறது. இது ஆண்டுக்கு மூன்று முறை ஜெனிவாவில் கூடி, ILOவின் கொள்கைகளைப் பற்றி முடிவெடுக்கிறது. தனது திட்டம் மற்றும் நிதிநிலை அறிக்கையை (budget) உருவாக்கி அவற்றை ILCயிடம் சமர்ப்பித்து அதனை நிறைவேற்றக் வலியுறுத்தும். மேலும் அது தலைமை இயக்குநரையும் தேர்ந்தெடுக்கிறது. GBயில் 56பேர் இருப்பார்கள். அவர்களில் 28பேர் அரசுகளின் பிரதிநிதிகள் ஆவர். வேலையளிப்போர் சார்பாக 14 பேரும் தொழிலாளர் சார்பாக 14 பேரும் உறுப்பினர்களாக இருப்பர். அரசு பிரதிநிதிகளில் 10பேர் - பிரேசில், இந்தியா, சீனா உள்ளிட்ட வளரும் நாடுகளை உள்ளிட்ட, தொழில்துறை முக்கியத்துவம் வாய்ந்த நாடுகளில் இருந்து, ILO உறுப்பினர்களால் நியமனம் செய்யப்படுவர். வேலையளிப்போர், தொழிலாளர், அரசு என்ற மூத்தரப்பினருக்கும் சமமான பிரதிநிதித்துவம் இருக்கும் வகையில் ILOவின் முத்தரப்பு கட்டமைப்பு இருக்கிறது.

ILOவின் நிரந்தரமான அலுவலகமாக சர்வதேச தொழிலாளர் அலுவலகம் இயங்குகிறது. ILOவின் அனைத்துவிதமான நடவடிக்கைகளின் மையமாக இந்த அலுவலகம்தான் இருக்கிறது. GBயின் கண்காணிப்பின் கீழும், 5 ஆண்டு பதவிக் காலத்தை கொண்ட, தேர்ந்தெடுக்கப்படும் தலைமை இயக்குநரின் தலைமையின் கீழும் ILOவின் அனைத்து நடடிவடிக்கைகளும் தயார் செய்யப்படுகின்றன. 110 நாடுகளைச் சேர்ந்த 1900 பணியாளர்கள் ILO வின் ஜெனிவா தலைமை அலுவலக ஊழியர்களாகவும் உலகெங்கும் உள்ள 40 கள அலுவலகங்களின் ஊழியர்களாகவும் இருக்கின்றனர்.

## ILO-வின் முத்தரப்பு கட்டமைப்பு என்றால் என்ன?

அரசு, வேலையளிப்பவர் மற்றும் தொழிலாளர் பிரதிநிதிகளை தனது அமைப்பிற்குள்ளும் அதன் அனைத்து செயல்பாடுகளிலும், ILOவில் முத்தரப்பு அல்லது மூன்று மட்ட முடிவெடுக்கும் அமைப்புமுறை கொண்டுள்ளது. ILO வின் முத்தரப்பு கட்டமைப்பு ஒவ்வொரு உறுப்பு நாட்டின் அரசுப் பிரதிநிதியையும்

வேலையளிப்பவர் மற்றும் தொழிலாளர் பிரதிநிதியையும் கொண்டதாக இருக்கிறது. ஒவ்வொரு உறுப்பு நாடும் ILC மாநாட்டிற்கு இரண்டு அரசுப் பிரதிநிதிகளையும் ஒரு வேலையளிப்பவரின் பிரதிநிதியையும் ஒரு தொழிலாளி பிரதிநிதியும் அவர்களுடன் அவர்களுக்கான ஆலோசகர்களையும் அனுப்ப வேண்டியதையும் ILOவின் அமைப்புச் சட்டம் கட்டாயமாக்குகிறது. ஒரு நாட்டின் அதிகப் பிரதிநிதித்துவம் உள்ள வேலையளிப்போர் மற்றும் தொழிலாளர் சங்க அமைப்புகளிலிருந்து வேலையளிப்போர் மற்றும் தொழிலாளர் பிரதிநிதிகள் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். ஒவ்வொரு உறுப்பு நாட்டு அரசாங்கமும் பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுக்கும் வேலையைச் செய்கிறது.

## எவ்வகை ஆவணங்களைக் (Instruments) கொண்டு தொழிலாளர் நிலைமைகளை மேம்படுத்த ILO முயல்கிறது?

தொழிலாளர் நிலைமைகளை முன்னேற்றுவதற்கான ILO வின் ஆவணங்கள் என்பது அதன் சர்வதேச தொழிலாளர் பொதுப்புரிதல் உடன்படிக்கைகளும், பரிந்துரைகளும் ஆகும். இவை ILCயால் நிறைவேற்றப்படுகின்றன. இந்த ஆவணங்கள் சர்வதேச அளவில் இனம் காணப்பட்ட சமூகக் கோட்பாடுகளையும் நோக்கங்களையும் முன்னெடுப்பவையாகவும் பணி தொடர்பான விவகாரங்களில் சர்வதேச தரநிர்ணய முறையைக் கொண்டவையாகவும் இருக்கும். ILO பொதுப்புரிதல் உடன்படிக்கைகள் சர்வதேச ஒப்பந்தங்களாக இருந்த போதிலும், அவை உறுப்பு நாடு ஒன்றால் அங்கீகரிக்கப்படும் போதுதான் அந்த நாட்டில் நடப்புக்கு வரும். பொதுவாக, பரிந்துரைகள் பொதுப்புரிதல் உடன்படிக்கைகள் பேசுகின்ற பொருள் பற்றியதாகவே இருக்கும். இந்த பரிந்துரைகளை நிறைவேற்றுவது உறுப்பு நாடுகளுக்குக் கட்டாயம் இல்லை. பரிந்துரைகள், ஒரு நாட்டின் தேசியக் கொள்கை மற்றும் செயல்பாடுகளுக்கான வழிகாட்டுதல்களாக அமையும். இந்த இரண்டு வகைப்பட்ட ஆவணங்களும் சேர்ந்து உலகெங்கும் நடைமுறைகள் மற்றும் பணிநிலைமைகள் மீது உறுதியான தாக்கங்களை உருவாக்க வேண்டும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

## ஒரு பொதுப்புரிதல் உடன்பாட்டை அல்லது பரிந்துரையை ILO எவ்வாறு நிறைவேற்றுகிறது?

ஒரு பொதுப்புரிதல் உடன்படிக்கை அல்லது பரிந்துரை ஏற்றுக்கொள்ளப்படுவதற்கு முன்பு, உறுப்பு நாடுகள் போதுமான அளவு கலந்தாலோசிக்கப் படுவதற்கும் போதுமான தொழில்நுட்பத் தயாரிப்பு நடப்பதற்காகவும் ILC விதிகளை உருவாக்குகிறது. பொருத்தப்பாடுள்ள எந்த ஒரு விவகாரத்தையும் பரிசீலித்து அறிக்கை அளிப்பதற்கு ILC கமிட்டி எதனையும் அமைக்கலாம். அந்த அறிக்கை கிடைத்தவுடன், ILC முன்மொழியப்பட்டுள்ள பொதுப்புரிதல் உடன்படிக்கை அல்லது பரிந்துரையை நிறைவேற்றுவதைப் பற்றி யோசிக்கிறது. அதன் பின் பொதுப்புரிதல் உடன்படிக்கை அல்லது பரிந்துரையின் வாசகங்கள் அவற்றின் முழு வடிவத்தில் தயாரிக்கப்படுவதற்காக நகல் தயாரிப்பு கமிட்டிக்கு அனுப்பப்படுகிறது. பொதுப்புரிதல் உடன்படிக்கை அல்லது பரிந்துரையை நிறைவேற்றுவதற்காக, ILO அமைப்புச் சட்டத்தின் பிரிவு 19ன்படி வாக்கெடுப்பினை ILC நடத்தும். பொதுப்புரிதல் அல்லது பரிந்துரையை நிறைவேற்ற வேண்டுமானால், ILCயில் கலந்துகொள்கின்ற பிரதிநிதிகளில் மூன்றில் இரண்டு பங்கினர் என்ற பெரும்பான்மை வாக்குகள் கிடைக்க வேண்டும்.

பொதுப்புரிதல் உடன்படிக்கைகளை ஒவ்வொரு உறுப்பு நாடும் முறைப்படி ஏற்றுக்கொள்ள அல்லது அங்கீகரிக்க (ratification) வேண்டும். பொதுப்புரிதல் உடன்படிக்கையை அங்கீகரித்த ஒவ்வொரு உறுப்பு நாடும், தான் கையெழுத்திட்டுள்ள பொதுப்புரிதல் உடன்படிக்கையின் வாசகங்களை நடைமுறையாக்க, எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் பற்றி – உதாரணமாக, தேசிய சட்டம் ஒன்று உருவாக்கப்பட்டது போன்ற நடவடிக்கைகளை சர்வதேச தொழிலாளர் அலுவலகத்திற்கு ஆண்டறிக்கையாக அனுப்பி வைக்க வேண்டும். பொதுப்புரிதல் உடன்படிக்கையை தேசிய அளவில் அங்கீகரிக்கும் நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை என்றாலும் அதனைப் பற்றி அறிக்கை அளிப்பது உறுப்பு நாடுகளின் கடமையாகும்.

இருந்தபோதும், பரிந்துரைகளை சட்டப்படி கட்டுப்படுத்தும் தன்மை உள்ளவை அல்ல. அவற்றை நிறைவேற்றுவது அரசுகளின் கடப்பாடு அல்ல. அவை, அரசுகளின் சமூகக் கொள்கைகளுக்கான வழிகாட்டி நெறிமுறைகள் மட்டுமே.

# ILO - வும் மீன்பிடித் துறையும்



மீன்பிடித்தொழில் தொடர்பானப் பொதுப்புரிதல் உடன்படிக்கைகள்

## மீன்பிடித் துறையில் ILO –வின் தலையீடு என்ன?

மீன்பிடித்துறையில் உள்ள தொழிலாளர்களின் நிலையை மேம்படுத்துவது பற்றிய ILOவின் ஆர்வம் 1920 முதல் தொடங்கியது. அப்போது இத்தாலியின் ஜெனோவாவில் நடைபெற்ற ILC யின் இரண்டாவது அமர்வில், மீன்பிடித்துறையில் பணி நேரத்தை வரையறுப்பது பற்றிய பரிந்துரை ஒன்றை ஏற்றுக்கொண்டது. இதுவரை நடைமுறைக்கு வராத இடங்களில் ஒரு நாளுக்கு எட்டு மணி நேர பணி அல்லது வாரம் ஒன்றுக்கு 48 மணி நேர பணி என்ற தரநிர்ணயம் நடைமுறைக்கு வர வேண்டும் என்று அந்தப் பரிந்துரை சொன்னது.

அதன்பின் 40 ஆண்டுகள் கழித்து மீன்பிடித் தொடர்பான மூன்று பொதுப்புரிதல் உடன்படிக்கைகள் ILCயில் நிறைவேற்றப்பட்டன. அவை பின்வருமாறு: குறைந்தபட்ச வயது (மீனவர்கள்) பொதுப்புரிதல் உடன்படிக்கை, 1959 (எண் 112) (Minimum Age (Fishermen) Convention, 1959 (No. 112); மருத்துவப் பரிசோதனை (மீனவர்கள்) பொதுப்புரிதல் உடன்படிக்கை 1959 (எண் 113) (Medical Examination (Fishermen) Convention, 1959 (No. 113); மீனவர்கள் ஒப்பந்த ஷரத்துகள் பற்றிய பொதுப்புரிதல் உடன்படிக்கை, 1959 (எண் 114) (Fishermen’s Articles of Agreement Convention, 1959 (No. 114).

பொதுப்புரிதல் உடன்படிக்கை எண் 112 அனைத்து கடல் வணிக மீன்பிடி கலங்களுக்கும் (vessels) பொருந்தும். இந்த மீன்பிடிக்கலங்களில் 15 வயதுக்குக் குறைவானவர்கள் பணிக்கு அமர்த்தப்படுவது தடைசெய்யப்பட்டது. இருந்தபோதும் ஆரோக்கியம் மற்றும் உடல் தகுதி இருக்கும் என்றால் 14 வயதுக்குக் குறையாத சிறார்கள் பணிக்கு அமர்த்தப்படலாம்.

பொதுப்புரிதல் உடன்படிக்கை எண் 113-ல் அனைத்து கடல் வணிக மீன்பிடிக் கலங்களுக்கும் பொருந்தும். ஆனால், மூன்று நாட்களுக்கு மேலாக கடலுக்கு செல்லாத கலங்களுக்கு இதிலிருந்து விலக்களிக்கப்பட்டன. ஒரு மீனவர் எந்தப் பணிக்கு அமர்த்தப்படுகிறாரோ அந்தப் பணிக்கான உடல் தகுதி உள்ளவர் என்ற சான்றிதழை அவர் வைத்திருக்க வேண்டும் என்று அது தரநிர்ணயம் செய்தது.

வேலை அளிப்பவர் மற்றும் தொழிலாளர் பிரதிநிதியின் ஆலோசனையுடன் சிலவகை கலங்களுக்கு விலக்களிப்பது என்ற வாசகத்துடன் கடல் வணிக மீன்பிடிக் கலங்களுக்காக பொதுப்புரிதல் உடன்படிக்கை எண் 114 கொண்டு வரப்பட்டது. தேசிய சட்டங்களுக்கு உட்பட்டு, நிர்ணயம் செய்யப்பட்ட காலகட்டத்துக்கோ அல்லது நிர்ணயம் செய்யப்படாத காலகட்டத்துக்கோ அல்லது ஒரு மீன்பிடிப் பயண காலகட்டத்துக்கோ மீன்பிடிக் கலத்தின் உரிமையாளரும், மீனவரும் செய்துகொள்ளும் ஒப்பந்தத்தின் ஷரத்துக்களை மேற்படி பொதுப்புரிதல் உடன்படிக்கை சொல்கிறது. ஒரு மீன் பிடி பயணத்திற்கு மீனவருக்கு அளிக்கப்பட வேண்டிய உணவுப் பொருட்களின் அளவு, சம்பளத்தின் அளவு, ஒப்பந்த முறிவுக்கான நிபந்தனைகள் உள்ளிட்ட பலவற்றை அது அளிக்கிறது.

மீன்பிடித் தொழிலில் வேலை நடைமுறை பற்றிய பொதுப்புரிதல் உடன்படிக்கைகள், 2007-க்கு முன்பு 1966-ல் நிறைவேற்றப்பட்டது. அவை பின்வருமாறு: மீனவர்களின் தகுதிச் சான்று பொதுப்புரிதல் உடன்படிக்கை, 1966 (எண். 125) (Fishermen's Competency Certificates Convention, 1966 (No. 125), மாலுமிகள் (மீனவர்கள்) தங்குமிட வசதி பற்றிய பொதுப்புரிதல் உடன்படிக்கை, 1966 (எண். 126) (Accommodation of Crews (Fishermen) Convention, 1966 (No. 126). இந்த இரண்டு பொதுப்புரிதல் உடன்படிக்கைகளிலும் மொத்த பதிவு நேர எடை 25 டன்னுக்குக் குறைவான (25 gross registered tonnage -GRT) கலங்களும், உள்நாட்டு மீன்பிடியில் ஈடுபட்டுள்ள கலங்களுக்கும் விலக்களிக்கப்பட்டன. இந்த விலக்குடன் வேறுசில விலக்குகளும் அந்த பொதுப்புரிதல் ஒப்பந்தங்களில் உள்ளன. இரண்டாவது பொதுப்புரிதல் உடன்படிக்கை 13.7 மீட்டருக்குக் குறைவான நீளம் உள்ள கலங்களுக்கும் விலக்களித்தது. இந்த இரண்டு பொதுப்புரிதல் உடன்படிக்கைகளும் பிரதானமாக தொழில்துறை மீன்பிடிக் கலங்களுக்குப் பொருந்துவன என்பது தெளிவு.

பொதுப்புரிதல் ஒப்பந்தத்தை அங்கீகரித்த ஒரு உறுப்பு நாடு, மீன்பிடி கலம் ஒன்றின் தலைவர், துணை தலைவர் அல்லது பொறியாளர் (skipper, mate or engineer) கடமைகளை ஆற்றுவதற்கான ஒரு நபர் அதற்கான தகுதி சான்றினைப் பெற்றிருக்க வேண்டும் என்றும் அதற்கான தர நிர்ணயங்களை உருவாக்க வேண்டும் என்றும் பொதுப்புரிதல் உடன்படிக்கை 125 சொல்கிறது. மீன்பிடிக் கலனின் மாலுமிகள்

கலனில் தங்குவதற்கான இடவசதிகளைச் செய்து தருவது அவசியம் என்று பொதுப்புரிதல் உடன்படிக்கை எண். 126 குறிப்பிடுகிறது. கப்பலைச் செலுத்துவது, மீன்பிடி, மீன்பிடிக் கலத்தைப் பழுதுபார்த்தல் மற்றும் பராமரிப்பு போன்றவற்றில் மீனவர்கள் பெற வேண்டிய பொதுவான பயிற்சி பற்றி தொழில்சார் பயிற்சி (மீனவர்) பரிந்துரைகள், 1966 (எண். 126) (The Vocational Training (Fishermen) Recommendation, 1966 (No. 126) கவனம் செலுத்தியது.

கடல்சார் பொதுப்புரிதல் உடன்படிக்கைகள் கடல் வணிக மீன்பிடிக்கும் பொருந்தும் வாசகங்களைக் கொண்டுள்ளன. கப்பல் உரிமையாளரின் பொறுப்புரிமை (நோய்வாய்பட்ட காயம்பட்ட கடலோடி) பொதுப்புரிதல் உடன்படிக்கை, 1936 (எண். 55) Shipowners' Liability (Sick and Injured Seamen) Convention, 1936 (No. 55) கடற்கரையோர மீன்பிடிக் கலங்கள் தவிர மற்றவற்றுக்குப் பொருந்தும். அதுபோல, கடலோடிகள் நலன் குறித்த பொதுப்புரிதல் உடன்படிக்கை, 1987 (எண்.163) (Seafarers' Welfare Convention, 1987 (No. 163); ஆரோக்கியப் பாதுகாப்பு மற்றும் மருத்துவ வசதி (கடலோடிகள்) பொதுப்புரிதல் உடன்படிக்கை, 1987 (எண். 164) (Health Protection and Medical Care (Seafarers) Convention, 1987 (No. 164); சமூகப் பாதுகாப்பு (கடலோடிகள்) பொதுப்புரிதல் உடன்படிக்கை (திருத்தப்பட்டது), 1987 (எண். 166) (Social Security (Seafarers) Convention (Revised), 1987 (No. 165); கடலோடிகள் தாயகம் திரும்புதல் (திருத்தப்பட்டது), 1987 (எண். 166) (Repatriation of Seafarers Convention, (Revised), 1987 (No. 166); தொழிலாளர் ஆய்வு (கடலோடிகள்) பொதுப்புரிதல் உடன்படிக்கை, 1996 (எண். 178) (Labour Inspection (Seafarers) Convention, 1996 (No. 178); கடலோடிகளை வேலைக்கு எடுத்தலும் வேலை அளித்தலுக்குமானப் பொதுப்புரிதல் உடன்படிக்கை, 1996 (எண். 179) (Recruitment and Placement of Seafarers Convention, 1996 (No. 179); கடலோடிகள் பணி நேரம் மற்றும் கப்பலில் ஆட்களை வேலைக்கு அமர்த்துதல் பொதுப்புரிதல் உடன்படிக்கை, 1996 (எண். 180) (Seafarers' Hours of Work and the Manning of Ships Convention, 1996 (No. 180) ஆகியவையும் கூட கடர்சார் வணிக மீன்பிடிக் கலங்களுக்குப் பொருந்தும்.

## மீன்பிடித்துறையில் புதிய தொழிலாளர் தரநிர்ணயங்களை முன்னுக்குக் கொண்டுவர ILO என்ன செய்திருக்கிறது?

மார்ச் 2002ல் நடைபெற்ற ILOவின் 283வது GB ஒரு பொதுப்புரிதல் உடன்படிக்கையை ILCயின் விவாதப் பொருளாக முன்வைத்தது. மீன்பிடித்துறையில் ஒன்றிணைந்த தரநிர்ணயம் பற்றிய பொதுப்புரிதல் உடன்படிக்கை அதற்குத் துணையாக பரிந்துரை என்பதாக அந்த முன்வைப்பு இருந்தது. தற்போதுள்ள ILOவின் 7 ஆவணங்களில் ஆறு ஆவணங்களை திருத்தி அமைப்பதாக புதிய தரநிர்ணயம் இருந்தது. மீனவர் தகுதி சான்று குறித்த பொதுப்புரிதல் உடன்படிக்கை, 1996 தவிர மற்ற அனைத்தும் திருத்தத்திற்கு ஆளாவதாக இந்த முன்வைப்பு இருந்தது. நவீன மீன்பிடிக் கலங்களில் (on board fishing vessels) பணிபுரிவோரின் பணியிடப் பாதுகாப்பு, ஆரோக்கியப் பாதுகாப்பு, சமூகப் பாதுகாப்பு போன்ற புதிய பிரச்சனைகளும் கருத்தில் கொள்ளப்பட்டன.

மீன்பிடித் தொழிலில் வேலை நடைமுறை பற்றிய பொதுப்புரிதல் உடன்படிக்கை, 2007-ம் (C188) அதற்குத் துணையான மீன்பிடித் தொழிலில் வேலை நடைமுறை பற்றிய பரிந்துரைகள் 2007-ம் (R199), 2007 ஜூனில் ஜெனிவாவில் நடைபெற்ற ILCயின் 96வது அமர்வில் நிறைவேற்றப்பட்டன. மீன்பிடித் துறை பற்றிய ILC கமிட்டி 2004 மற்றும் 2005ல் நடைபெற்ற அடுத்தடுத்த அமர்வுகளில் பொதுப்புரிதல் உடன்படிக்கை மற்றும் பரிந்துரைகள் பற்றிய முன்வைப்பு ஆவணத்தின் மீது விவாதம் நடத்திய பின்னரே, மேற்படி கமிட்டியின் பரிந்துரைகளின் மீது உறுப்பு நாடுகளும் வேலையளிப்போரும் அளித்த மாறுதல்களை உள்வாங்கிய பின்னரே, 2007ல் ஜெனிவாவில் ILC கூடி இந்த பொதுப்புரிதல் உடன்படிக்கையை நிறைவேற்றியது என்பதையும் இங்கே குறிப்பிட வேண்டும்.

எட்டு கடலோர நாடுகள் உள்ளிட்ட பத்து உறுப்பு நாடுகள் பொதுப்புரிதல் ஒப்பந்தத்தை அங்கீகரித்தது பற்றி ILOவில் பதிவு செய்து 12 மாதங்கள் ஆன பின்னரே மீன்பிடித் தொழிலில் வேலை நடைமுறை பற்றிய பொதுப்புரிதல் உடன்படிக்கை, 2007 நடைமுறைக்கு வரும். □

# மீன்பிடித் தொழிலில் வேலை நடைமுறை பற்றிய பொதுப்புரிதல் உடன்படிக்கை, 2007 (WFC)

மீன்பிடித் தொழிலில் வேலை நடைமுறை பற்றிய
பொதுப்புரிதல் உடன்படிக்கை


ஆழ்கடல்
மீன்பிடிப்பு
WFC '07
தொலைதூரக் கடலில்
மீன்பிடிக்கும் கலங்கள்

## மீன்பிடித் தொழிலில் வேலை நடைமுறை பற்றிய பொதுப்புரிதல் உடன்படிக்கை, 2007ன் முக்கியத்துவம் என்ன?

கடைசியாக மீனவத் தொழிலாளர்களுக்கான தரநிர்ணயம் நிறைவேற்றப்பட்டு 40 ஆண்டுகளுக்கு மேல் ஆகியிருந்தபோதும், முந்தைய பொதுப்புரிதல் ஒப்பந்தங்கள் அங்கீகரிக்கப்படும் அளவு குறைவாகவே இருந்து வந்துள்ளது. மேலும், பழைய ஆவணங்கள் பொருத்தப்பாடு உள்ளவையாக தற்போது இல்லை. எனவே, இன்றைய மீன்பிடித் தொழில் நடைமுறைக்கு ஏற்ப அவை முன்னேற்றப்பட்டிருக்கின்றன. இந்தத் துறைக்குப் பொருந்தி வந்த கடல்சார் தொழிலாளர் பொதுப்புரிதல் உடன்படிக்கைகளும் கூட, கடல்சார் தொழிலாளர் பொதுப்புரிதல் உடன்படிக்கை, 2006 (MLC) நிறைவேற்றப்பட்ட பின்னர், மேற்படி உடன்படிக்கை திருத்தப்பட்டபோது மீன்பிடித் தொழிலாளர்களை விலக்கி வைத்துவிட்டதால், பொருத்தப்பாடற்றுப் போய்விட்டன. இந்த மீன்பிடித் தொழிலாளர் தரநிர்ணயங்களை மறுபரிசீலனை செய்யும் மீன்பிடித் தொழிலில் வேலை நடைமுறை பற்றிய பொதுப்புரிதல் உடன்படிக்கை, 2007, கடந்த 40 ஆண்டுகளில் மீன்பிடித் துறையில் ஏற்பட்டுள்ள மாறுதல்களைப் பிரதிபலிப்பதுடன், MLCயின் வரையறைக்குள் மீன்பிடிக் கலங்கள் சேர்க்கப்படாததால் ஏற்பட்ட விடுபாட்டையும் ஈடுகட்டுவதாக உள்ளது.

பொருளாதாரமும், வணிகமும் உலகமயமாக்கப்பட்ட இன்றைய காலகட்டத்தில் வளரும் நாடுகளின் மீன்பிடிக் கலங்கள் தங்களின் கடலில் மீன்பிடிப்பது மட்டுமின்றி பரந்து விரிந்த கடல் வெளியிலும், பிற நாடுகளின் கடல் பரப்பிலும் கூட மீன் பிடிக்கின்றன. தொழில் வளர்ச்சி கண்ட நாடுகளின் நவீன/தங்கு மீன்பிடி கலங்களில் வளரும் நாடுகளின் தொழிலாளர்கள் பணிபுரிவது முன்னெப்போதையும் விட மிக அதிக அளவில் அதிகரித்துள்ளது. இதுபோன்ற சூழலில், ‘மற்றவற்றுடன் ஒப்பிடும்போது அபாயகரமான செயல்பாடு’ என்று ILO வரையறுத்துள்ள மீன்பிடித் தொழிலில் உள்ள தொழிலாளர் பிரச்சனைகளை பொருளுள்ள வகையில் எதிர்கொள்ளவும், தங்கு மீன்பிடிக் கலங்களில் பணிபுரியும் தொழிலாளர்களின் வாழ்க்கை மற்றும் பணியிட நிலைமைகளை மேம்படுத்தவும் மீன் தொழிலில் வேலை நடைமுறை பற்றிய பொதுப்புரிதல் உடன்படிக்கை, 2007 பயனுள்ள ஆயுதமாக இருக்கும்.

ILOவின் மீன்பிடித் தொடர்பான ஆவணங்களின் வரலாற்றில் முதன்முறையாக, வாழ்க்கைத் தேவைக்கான மீன்பிடி மற்றும் பொழுதுபோக்கு மீன்பிடி தவிர்த்து, ஆறுகள், ஏரிகள், கால்வாய்களில் மீன்பிடிப்பது உட்பட அனைத்து மீன்பிடி செயல்பாடுகளுக்கும் பொருந்தும் வகையில் மீன்பிடி தொழிலில் வேலை நடைமுறை பற்றிய பொதுப்புரிதல் உடன்படிக்கை, 2007 உருவாக்கப்பட்டுள்ளது. இதில் முக்கியமானது என்னவெனில், சிறுவீத மீன்பிடி உட்பட உள்நாட்டு மீன்பிடியும் கடல் மீன்பிடியும் உள்ளடக்கியதாக, மீன்பிடி தொடர்பான முதல் ILO பொதுப்புரிதல் உடன்படிக்கையாக இது அமைந்துள்ளது. இந்த உடன்படிக்கை பெருவீத மீன்பிடிப்புக்கும், சிறுவீத மீன்பிடிப்புக்கும், திறந்த அல்லது மூடப்பட்ட கலங்களில் வேலை செய்யும் மீன்பிடித் தொழிலாளர்களுக்கும் பொருந்தி வருவதாகும்.

## மீன்பிடித் தொழிலில் வேலை நடைமுறை பற்றிய பொதுப்புரிதல் உடன்படிக்கை, 2007ன் பிரதான இலக்குகள் என்ன?

மீன்பிடித் தொழிலில் வேலை நடைமுறை பற்றிய பொதுப்புரிதல் உடன்படிக்கை, 2007-யை அங்கீகரிக்கும் நாடுகள், மீன்பிடிக் கலங்கள் பாதுகாப்பாக பயணிப்பதற்கும் செயல்படுவதற்கும் தேவையானவற்றை குறிப்பிட வேண்டும். ILOவின் உறுப்பு நாடுகள் பின்வருபவை பற்றிய தர நிர்ணயங்களை உருவாக்க வேண்டும்:

தங்கி மீன்பிடி கலங்கள் கொண்டிருக்க வேண்டிய குறைந்தபட்ச அம்சங்கள்:

- இளவயதினரின் பாதுகாப்பு, ஆரோக்கியம் மற்றும் நடத்தையை சிக்கலுக்குள்ளாகும் வகையில் தங்கி மீன்பிடி கலங்களில் வேலை செய்வதற்கான குறைந்தபட்ச வயதை நிர்ணயம் செய்தல்.
- தங்கி மீன்பிடி கலங்களில் தங்களுக்கு அளிக்கப்படும் பணிகளை நிறைவேற்றும் தகுதியுள்ளவர்களாக மீனவர்கள் இருப்பதை உறுதி செய்யும் வகையில் மருத்துவ சோதனை செய்தல்.

*பணி நிலைமைகள்*

- கலம் பாதுகாப்பாக பயணப்படுவது மற்றும் இயங்குவதற்குத் தேவையான பாதுகாப்பான ஆட்கள் எண்ணிக்கை
- தங்கி மீன்பிடிக்கும் கலங்களில் மீனவர்களின் பாதுகாப்பையும் ஆரோக்கியத்தையும் உறுதி செய்யும் வகையில் முறையான கால இடைவெளியில் ஓய்வு.
- கலம் மீன்பிடிக்கப் புறப்படுவதற்கு முன்பு மாலுமிகளின் பட்டியல் ஒன்றை வைத்திருப்பது, அதன் நகலை அதிகாரிகளுக்கு அளிப்பது.
- மீன்பிடிக் கலங்களில் கௌரவமான பணிநிலைமை மற்றும் வாழும் நிலைமையை உத்திரவாதம் செய்வதற்கான மீனவர்களின் பணி ஒப்பந்தங்களையும் அவர்கள் பற்றிய குறைந்தபட்ச விவரங்களையும் தயார் செய்வது.
- அந்நிய துறைமுகம் ஒன்றிலிருந்து மீனவர்கள் தாயகம் திரும்புவதற்கான உரிமை
- மீனவர்களுக்கு வேலைக்கொடுப்பது மற்றும் வேலையளிப்பது
- மீனவர்களுக்கு முறையான கால இடைவெளியில் சம்பளம் அளிப்பதற்கான ஏற்பாடு

*தங்குமிட வசதி மற்றும் உணவு*

- தங்கு மீன்பிடிக் கலங்களில் தங்குவதற்கும் உணவுக்கும் குடிநீருக்குமான ஏற்பாடுகள்.

*மருத்துவ வசதி, ஆரோக்கிய பாதுகாப்பு மற்றும் சமூகப் பாதுகாப்பு*

- மருத்துவ வசதி, கரையில் மருத்துவ வசதி பெறுவதற்கான உரிமை, கடுமையான உடல் நலக்குறைவு ஏற்படும்போதோ அல்லது காயம் ஏற்படும்போதோ உரிய நேரத்தில் கரைக்கு எடுத்துச் செல்லப்படுவதற்கான உரிமை
- தங்கு மீன்பிடிக் கலங்களில், அபாய மதிப்பீடு மற்றும் நிர்வாகம் உள்ளிட்ட, பணியிட விபத்துகள், பணியினால் ஏற்படும் நோய்கள் மற்றும் பணி தொடர்பான அபாயங்களைத் தவிர்ப்பதற்கான ஏற்பாடுகள்.
- மீன்பிடி சாதனங்களை இயக்குவது மற்றும் மீன்பிடி செயல்பாடுகள் பற்றி பயிற்சி அளிப்பது.

- தங்கு மீன்பிடிக் கலங்களில் நிகழும் விபத்துகளை அறிக்கை செய்வது மற்றும் புலனாய்வு செய்வது
- மற்ற தொழிலாளர்களுக்குப் பொருந்தும் சமூகப் பாதுகாப்புக்குக் குறைவானதாக இல்லாத சமூகப் பாதுகாப்பின் பலன்களை மீனவர்களும் அவர்களைச் சார்ந்திருப்போரும் பெறுவதை உறுதி செய்வது, அனைத்து மீனவர்களுக்கும் ஒருங்கிணைந்த சமூகப் பாதுகாப்பை எட்டுவது மற்றும் சமூகப் பாதுகாப்பு உரிமையைப் பேணுவது
- பணி தொடர்பான சுகவீனம், காயம் மற்றும் மரணம் ஆகியவற்றிலிருந்து பாதுகாப்பு மற்றும் மீனவர்களின் ஆரோக்கியப் பாதுகாப்பிற்கும் மருத்துவத்திற்கும் கலம் உரிமையாளர்களைப் பொறுப்பாக்குவதை உறுதி செய்வது

*விதிகளுக்குக் கீழ்படுவது மற்றும் நடைமுறைபடுத்துவது*

- இந்த உடன்படிக்கையின் தேவைகளுக்கு ஏற்ப கீழ்படுவதை உறுதி செய்வதற்கான கலத்தின் சட்டக்கட்டுப்பாட்டு பகுதி (jurisdiction) மற்றும் கட்டுப்பாட்டை திறன் வாய்ந்த வகையில் நடைமுறை படுத்துவதற்கான கட்டமைப்பை உத்திரவாதம் செய்வது

(அ) 24 மீட்டர்கள் அல்லது அதற்கு மேற்பட்ட நீளம் உள்ள மீன்பிடிக் கலங்கள், (ஆ) வழக்கமாக 7 நாட்களுக்கு மேல் கடலில் தங்கும் மீன்பிடிக் கலங்கள். அல்லது (இ) தொலை தூரக்கடலில் மீன்பிடிக்கும் கலங்கள் ஆகியவற்றுக்கு மேற்சொன்ன வாசகங்கள் பொருந்தும். இவற்றில் பலவும், ஒரு நாட்டின் அரசு இந்தப் பொதுப்புரிதல் உடன்படிக்கையின் பார்வையிலிருந்து விதிவிலக்கு அளிக்கவில்லை என்றால், மீன்பிடிக் கலங்களுக்கும், அவற்றில் பணிபுரியும் தொழிலாளர்களுக்கும் பொருந்தும்.

## இந்த இலக்குகளை எட்டுவதற்காக இந்த பொதுப்புரிதல் உடன்படிக்கையில் குறிப்பாக சொல்லப்பட்டுள்ளவை யாவை?

ஒன்பது அத்தியாயங்கள் மற்றும் மூன்று இணைப்புகளில் பரந்து கிடக்கும் 54 ஷரத்துகளைக் கொண்டதாக இந்த பொதுப்புரிதல் உடன்படிக்கை உள்ளது. அத்தியாயம் 1, வரையறைகள் என்ன என்பதைச் ஷரத்து 1-ல் சொல்கிறது. ஷரத்து 2, 3, 4 மற்றும் 5 உடன்படிக்கையில் செயல்பரப்பு (Scope) என்னவென்பதைச் சொல்கின்றன.

அத்தியாயம் 2, நடைமுறைபடுத்துதல் (ஷரத்து 6) தகுதியுள்ள அதிகார அமைப்பு மற்றும் ஒருங்கிணைப்பு (ஷரத்து 7) மீன்பிடிக் கலம் உரிமையாளர், தலைவர் மற்றும் மீனவர்களின் பொறுப்புகள் (ஷரத்து 8) ஆகிய பொதுக் கோட்பாடுகள் பற்றி பேசுகிறது.

அத்தியாயம் 3, குறைந்தபட்ச வயது (ஷரத்து 9) மருத்துவ சோதனை (ஷரத்து 10,11 மற்றும் 12) ஆகிய மீன்பிடிக் கலம் தளத்தின் குறைந்தபட்ச தேவைகள் பற்றி பேசுகிறது.

அத்தியாயம் 4, பணி நிபந்தனைகள் பற்றியும் அத்தியாயம் 5 தங்குமிட வசதி மற்றும் உணவு (ஷரத்து 25 முதல் 28) பற்றியும், அத்தியாயம் 6 மருத்துவம், ஆரோக்கியப் பாதுகாப்பு மற்றும் சமூகப்பாதுகாப்பு பற்றியும் பேசுகின்றன. அத்தியாயம் 4 மற்றும் 6, இவைதான் இந்த பொதுப்புரிதல் உடன்படிக்கையின் வெகு நீளமான பகுதிகள் ஆகும்.

பணிக்காக ஆட்களை ஒதுக்குதல் மற்றும் ஓய்வு நேரம் (ஷரத்து 13 மற்றும் 14) மாலுமிகள் பட்டியல் (ஷரத்து 15), மீனவர்கள் பணி ஒப்பந்தம் (ஷரத்துகள் 16, 17, 18, 19 மற்றும் 20) தாயகம் திரும்புதல் (ஷரத்து 21) வேலைக்கொடுத்தல் பணியளித்தல் (ஷரத்து 22) மீனவர்களுக்கு சம்பளம் வழங்குதல் (ஷரத்து 23, 24) ஆகியவை அத்தியாயம் 4-ல் உள்ளன.

மருத்துவ சேவை (ஷரத்து 29 முதல் 30), பணியிடப் பாதுகாப்பு மற்றும் ஆரோக்கியம் விபத்து தடுப்பு (ஷரத்து 31 முதல் 33 வரை) சமூகப் பாதுகாப்பு (ஷரத்து 34 முதல் 37 வரை) பணி தொடர்பான சுகவீனம், விபத்து, மரணம் (ஷரத்து 38 மற்றும் 39) ஆகியவை அத்தியாயம் 6-ல் சொல்லப்படுகின்றன.

அத்தியாயம் 7, கீழ்படிதல் மற்றும் அமலாக்கம் (ஷரத்து 40 முதல் 44 வரை) பற்றி பேசுகிறது. அத்தியாம் 8 இணைப்பு 1, அளவையில் சமன்பாடு பற்றியும் இணைப்பு 2, மீனவர் பணி ஒப்பந்தம் பற்றியும் இணைப்பு 3, மீன்பிடிக் கலனில் தங்கும் வசதி பற்றியும் சொல்கின்றன. இறுதியான சில ஏற்பாடுகள் பற்றி அத்தியாயம் 9 பேசுகிறது.

## மீன் தொழிலில் வேலை நடைமுறை பற்றிய பொதுப்புரிதல் உடன்படிக்கை, 2007-ன் கட்டமைப்பு என்ன?

மீன்பிடித் தொழிலில் வேலை நடைமுறை பற்றிய பொதுப்புரிதல் உடன்படிக்கை, 2007 இரண்டடுக்கு கட்டமைப்பு கொண்டது. ஒருபுறம், (அ) 24 மீட்டர்கள் மற்றும் அதற்கு மேலான நீளம் கொண்ட கலங்களுக்கான தரநிர்ணயம், (ஆ) 7 நாட்களுக்கு மேல் கடலில் தங்கும் கலங்களுக்கான தரநிர்ணயம், அல்லது (இ) 200 கடல் மைல்களுக்கு மேல் பயணப்படும் கலங்களுக்கான தரநிர்ணயம் அல்லது (ஈ) கண்டத்திட்டு எல்லையின் வெளிப்புறத்தைத் தாண்டும் கலங்களுக்கான தரநிர்ணயம் மற்றும் (உ) அதுபோன்ற கலங்களில் பணிபுரியும் தொழிலாளர்களுக்கான தரநிர்ணயம் பற்றிய விதிமுறைபடியான தரநிர்ணயங்கள் பற்றி பொதுப்புரிதல் உடன்படிக்கை பேசுகிறது. மற்றொருபுறம், இந்தப் பொதுப்புரிதல் உடன்படிக்கையின் பரப்பு எல்லையில் வருகின்ற இதர மீன்பிடிக் கலங்களுக்கு நெகிழ்வான தர நிர்ணயத்தை முன்வைக்கிறது. அவற்றுக்கு இந்த பொதுப்புரிதல் உடன்படிக்கையின் வாசகங்களைப் பொருத்துவதற்கான பொறுப்பையும் நடைமுறைகளையும் உறுப்பு நாடுகளுக்கு அளிக்கிறது.

பாரம்பரிய மீன் பிடி படகுகள், சிறுவீத மீன்பிடி படகுகள், உட்பட, மீன்பிடித் தொழிலாளர் தரநிர்ணயங்களால் பலன் பெற வேண்டிய கலங்கள் யாவை என்று உறுப்பு நாடுகள் தீர்மானிக்க வேண்டும். மேலும், சிலவகை கலங்கள் தொடர்பான, இந்த பொதுப்புரிதல் உடன்படிக்கையின் சில வாசகங்களை 'முன்னோக்கிய நடைமுறைபடுத்துதல்' நடைமுறைப் படுத்துவதற்கான வாசகங்களும் உள்ளன.

## முன்னோக்கிய நடைமுறைபடுத்துதல் (progressive implementation) அணுகுமுறை என்றால் என்ன?

முன்னோக்கிய வகையில் நடைமுறைபடுத்துதல் என்ற கருத்தாக்கம் வரையறுக்கப்படவில்லை என்றாலும், இந்த பொதுப்புரிதல் உடன்படிக்கையின் இனம் காணப்பட்ட வாசகங்கள் சிலவற்றை (கீழே பார்க்கவும்) வெகு நீண்ட காலப்போக்கில் நாடுகள் நடைமுறைபடுத்துவதை அனுமதிக்கும் சில வாசகங்கள்

இருக்கின்றன என்று புரிந்துகொள்ளப்படுகிறது. பின்வரும் வகையினங்களில் உள்ள கலங்களுக்கு முன்னோக்கிய வகையில் நடைமுறைபடுத்துவதை இந்தப் பொதுப்புரிதல் உடன்படிக்கை அனுமதிக்கிறது.

(அ) 24 மீட்டர் நீளத்திற்குக் குறைவான கலங்கள்; (ஆ) குறைந்த காலத்திற்கு மட்டும், அதாவது 7 நாட்களுக்குக் குறைவாகப் பயணம் மேற்கொள்ளும் கலங்கள், மற்றும் / அல்லது (இ) தொலைதூரக் கடலில் மீன்பிடி மேற்கொள்ளாத கலங்கள்; மேலும் இந்தக் கலங்களில் பணிபுரியும் தொழிலாளர்கள். பின்வரும் அம்சங்களுக்கு மட்டுமே முன்னோக்கிய நடைமுறைபடுத்தும் நெகிழ்வுத் தன்மை பொருத்தமாகும்:


- மேலே சொல்லப்பட்ட மூன்று வகையினங்களில் உள்ள கலங்கள் மற்றும் 24 மீட்டருக்கு மேல் நீளம் உள்ள கலங்கள் மற்றும் 7 நாட்களுக்குக் குறைவாக கடலில் இருக்கும் கலங்களில் பணிபுரியும் மீனவர்களுக்கான மருத்துவ தகுதி சான்று தேவை.
- கலத்தில் உள்ள பணியாளர்களின் பட்டியலை வைத்திருக்க வேண்டும்
- கலத்தில் இருக்கும்போது கௌரவமான பணி மற்றும் வாழ்க்கை நிலைமைகளை உறுதி செய்வதற்காக பணியாளருக்கும் கலத்தின் உரிமையாளருக்கும் இடையிலான எழுத்துபூர்வமான ஒப்பந்தம் ஒவ்வொரு தொழிலாளிக்கும் இருப்பதை கலத்தின் உரிமையாளர் உறுதி செய்ய வேண்டும்.
- மீனவர்கள் பங்கேற்கும் அபாய மதிப்பீடு
- பணியிட விபத்து அல்லது சுகவீனத்தின் போது, மருத்துவ வசதி மற்றும் இழப்பீடு வழங்குவது உள்ளிட்ட, பணியிட சுகவீனம், காயம் அல்லது மரணத்திற்கு பாதுகாப்பு வழங்குவதற்கு, கலத்தின் உரிமையாளர் பொறுப்புரிமை ஏற்பது அல்லது கட்டாய காப்பீடு அல்லது தொழிலாளர் இழப்பீடு அல்லது வேறு திட்டங்கள் மூலம் பாதுகாப்பு வழங்குவதை ILO உறுப்பினர்கள் மேற்கொள்ள வேண்டும்.

மேற்சொன்ன மூன்று வகைப்பட்ட மீன்பிடி கலங்களின் உரிமையாளர்களுக்கு முன்னோக்கிய அமுலாக்கம் பலனளிப்பதாக உள்ளது. குறிப்பாக, மீன்பிடித் தொழிலில் வேலை நடைமுறை பற்றிய பொதுப்புரிதல் உடன்படிக்கை, 2007-யினை

அங்கீகரிக்கும் நாடுகளுக்கு இவற்றை நீண்ட காலப் போக்கில் நடைமுறைபடுத்துவதற்கு அனுமதிக்கிறது. இந்த அணுகுமுறையின் காரணமாக, பொதுப்புரிதல் உடன்படிக்கையை நடைமுறைபடுத்துவதற்கான அடிக்கட்டுமான வசதி/நிறுவன வசதி குறைவாக உள்ள நாடுகள் இந்தப் பொதுப்புரிதல் உடன்படிக்கையை பெருமளவு நடைமுறைபடுத்த முன்வரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. 

# பாரம்பரிய மீன்பிடி
# மற்றும்
# சிறுவீத மீன்பிடி

பாரம்பரிய மற்றும் சிறுவீத மீன்பிடிப்பு


பெருவீத மீன்பிடிப்பு
சிறுவீத மீன்பிடிப்பு

## சிறுவீத மீன்பிடியிலும் தொழிலாளர் தரநிர்ணயங்களைக் கருத்தில் கொள்வது முக்கியத்துவம் வாய்ந்ததாக இருப்பது ஏன்?

தொழில்நுட்ப வளர்ச்சியின் காரணமாக 1969-கள் முதல் மீன்பிடியிலும், மீன்பிடி கலங்களின் தன்மையிலும் மிக அதிகமான இயந்திரமயமாக்கல் நடந்துள்ளது. இதன் காரணமாக, பாரம்பரிய மற்றும் சிறுவீத மீன்பிடிக் கலங்களின் மீன்பிடி நடவடிக்கை தூரமும் அதிகமாகியுள்ளது. இதன்விளைவாக, சிறுவீத மீன்பிடி கலங்களில் பணியாற்றுபவர்களின் பணி மற்றும் வாழ்க்கை நிலைமைகளில் குறிப்பான மாற்றங்கள் அல்லது அதற்கான தேவைகள் முன்வந்துள்ளன.

1970-களில் துவங்கி பல நாடுகள் 200 கடல் மைல் தனியுரிமை பொருளாதார மண்டலம் (exclusive economic zone -EEZ) அல்லது தனியுரிமை மீன்பிடி மண்டலத்தை (exclusive fishing zone -EFZ)அறிவித்துள்ளதும் அதனுடன் சேர்ந்து கப்பல் பயணம் மற்றும் மீன்பிடி முறையில் ஏற்பட்டுள்ள முன்னேற்றங்களும், கடற்கரை நாடுகளின் EEZ மற்றும் EFZல் பெருவீத மற்றும் சிறுவீத மீன்பிடியின் வாய்ப்புகளை விரிவாக்கியுள்ளன. கலத்தைச் செலுத்துவதற்காக உதவும் சாதனங்கள் (navigational aids) சிறு கலங்கள், பெரிய கலங்களுக்கு இணையாக, பலநாட்கள் மீன்பிடிக்காக தொலைதூரம் பயணப்படுகின்றன. இதன்காரணமாக, பெரிய மீன்பிடிக் கலங்களின் தொழிலாளர்களுக்கு இணையாக சிறிய கலங்களின் தொழிலாளர்களின் பணி மற்றும் வாழ்விட வசதிகளை மேம்படுத்துவது முக்கியமானதாகிறது. 24 மீட்டருக்குக் குறைவான நீளம் உள்ள கலங்களில் மீனவருக்கும் உரிமையாளருக்கும் இடையில் விசேஷமான ஏற்பாடுகள் செய்துகொள்வதைப் பார்க்க முடிகிறது. இதன் காரணமாக, மீன்பிடி நடவடிக்கைகள் சில தொழில்துறை மீன்பிடியை நோக்கி நகர்வதைக் காண்கிறோம்.

சிறுவீத மீன்பிடி கலங்களில், குறிப்பாக வளரும் நாடுகளின் மீன்பிடித் துறையில் உள்ள தொழிலாளர் நிலைமைகள் தாறுமாறாக இருப்பதை, மீன் தொழிலில் வேலை நடைமுறை பற்றிய பொதுப்புரிதல் உடன்படிக்கை, 2007 தடுக்க முடியும். சிறுவீத மீன்பிடியில் கூட தொழிலாளர்களின் பணி மற்றும் வாழ்க்கை நிலைமைகளைச் சிறப்பாக்கும் ஒரு வரைமுறைபடுத்துதல் தேவையானதாக இருக்கிறது என்பது தெளிவு.

## பாரம்பரிய மீனவர்களும் சிறுவீத மீன்பிடியில் ஈடுபட்டுள்ள படகுகளும் மீன்பிடித் தொழிலில் வேலை நடைமுறை பற்றிய பொதுப்புரிதல் உடன்படிக்கை, 2007-னால் எவ்வாறு பயனடைவார்கள்?

மீன்பிடித் தொழிலில் வேலை நடைமுறை பற்றிய பொதுப்புரிதல் உடன்படிக்கை, 2007 பெரிய அளவு மீன்பிடி அல்லது சிறுவீத மீன்பிடி அல்லது பாரம்பரிய மீன்பிடி அல்லது பாரம்பரிய மீன்பிடி கலங்கள் என்று வெளிப்படையாக வேறுபடுத்தவில்லை என்றாலும், விதிவிலக்குகள் சொல்லப்பட்ட போதும், அனைத்து மீன்பிடி நடவடிக்கைகளையும் உள்ளடக்கியதாகத்தான் அது இருக்கிறது. இந்த பொதுப்புரிதல் உடன்படிக்கையின் காரணமாக சிறுவீத மீன்பிடிக் கலங்களுக்குக் கிடைக்கும் பலன்களில் பின்வருவனவும் அடங்கும்:

- குறைந்தபட்ச வயது நிர்ணயம்
- மருத்துவ சோதனை
- கலத்தில் பணியாற்றுபவர்கள் பட்டியல்
- முறையான கால இடைவெளியில் ஓய்வு
- பணிக்கான ஒப்பந்தம்
- முறையான கால இடைவெளியில் சம்பளம்
- கலத்தில் தங்குமிட வசதி, உணவு மற்றும் பாதுகாப்பான குடிநீர்
- முதலுதவி செய்வதற்குப் பயிற்சி செய்ய மீனவர் ஒருவர் உள்ளடக்கிய மருத்துவ சாதனங்கள் மற்றும் மருந்துகள்
- கரையில் மருத்துவம் செய்துகொள்வதற்கான உரிமை
- மீன்பிடிக் கலங்களில் விபத்துகள், பணியினால் ஏற்படும் சுகவீனம் மற்றும் பணியிட அபாயங்கள் தடுக்கப்படுவது,
- அனைத்துவிதமான மீன்பிடி சாதனங்களையும் பயன்படுத்துவதற்கு மீனவர்களுக்குப் பயிற்சி
- மீன்பிடிக் கலத்தில் ஏற்பட்ட விபத்துகள் பற்றி அறிக்கை செய்தல் மற்றும் புலனாய்வு செய்தல்
- ஆரோக்கியப் பாதுகாப்பு மற்றும் மருத்துவம்
- சமூகப் பாதுகாப்பு

இருந்தபோதும், பாரம்பரிய மற்றும் சிறுவீத மீன்பிடி மேற்சொன்ன வாசகங்களால் பலன் பெறுமா என்பது, மற்ற பிற விஷயங்களுடன், குறிப்பிட்ட சிறுவீத மீன்பிடி நடவடிக்கைகள் இந்தப் பொதுப்புரிதல் உடன்படிக்கையின் செயல்பரப்புக்குள் கொண்டுவரப்படுமா என்பதைப் பொறுத்ததாகும். சிறுவீத மீன்பிடிக்குள் அடங்கும் வகையினங்கள் இந்தப் பொதுப்புரிதல் உடன்படிக்கைக்குள் கொண்டுவரப்படுமா என்பது தேசிய அளவில்தான் தீர்மானிக்கப்பட வேண்டும்.

## மீன் தொழிலில் வேலை நடைமுறை பற்றிய பொதுப்புரிதல் உடன்படிக்கை, 2007 அனைத்து விதமான மீனவர்களுக்கும் மீன்பிடிப் படகுகளுக்கும் பொருந்துமா?

சம்பளத்திற்கு அல்லது மீன்பிடியில் ஒரு பங்கு என்ற அடிப்படையில் அல்லது சுய வேலை என்பதாக 'மீன்பிடியில் பங்கெடுப்பவர் உட்பட, எந்தவொரு திறனின் அடிப்படையிலும், வேலையளிக்கப்பட்ட, வேலைக்கு அமர்த்தப்பட்ட எந்தவொருவரையும் மீன்பிடித் தொழிலில் வேலை நடைமுறை பற்றிய பொதுப்புரிதல் உடன்படிக்கை, 2007-ல் சொல்லப்படும் மீனவர்' என்ற பதம் குறிப்பிடுகிறது. எனவே, மீனவர்கள் மட்டுமல்லாமல், மீன்பிடிக் தளத்தில் உள்ள மீன்பதனிடும் தொழிலாளர்களும் கூட இந்தப் பொதுப்புரிதல் உடன்படிக்கையின் செயல் எல்லைக்குள் கொண்டுவரப்படுகிறார்கள்.

உள்நாட்டு மீன்பிடியில் ஈடுபட்டுள்ள கலங்கள் மற்றும் கடல் மீன்பிடியில் ஈடுபட்டுள்ள சில கலங்கள் அவற்றின் நீளம், மீன்பிடியின் கால அளவு, செயல்படும் பகுதி, மீன்பிடியின் வகையினம் போன்றவற்றின் அடிப்படையில் விலக்கி வைக்க இந்த பொதுப்புரிதல் உடன்படிக்கை வாய்ப்பளிக்கிறது. இருந்தபோதும், கலத்தின் நீளம் 24 மீட்டருக்கு குறைவாக இருந்தாலும், அது 7 நாட்களுக்கு மேல் கடல் பயணம் மேற்கொள்ளக்கூடியது என்றாலும் 200 கடல் மைல்களைத் தாண்டி பயணம் மேற்கொள்ளும் என்றாலும் அல்லது கண்டத்திட்டின் வெளி எல்லையைத் தாண்டிச் செல்லும் என்றாலும் அதுபோன்ற விதிவிலக்குச் சாத்தியம் இல்லை.


WFC'07
மருத்துவ வசதி
கரையில் இருந்து
மீன்பிடிப்பவர்கள்
நிறைவான
பணிநிலைமைகள்

## கரையிலிருந்து மீன் பிடிக்கும் அனைவருக்கும் மீன் தொழிலில் வேலை நடைமுறை பற்றிய பொதுப்புரிதல் உடன்படிக்கை, 2007 பயன் தருவது எவ்வாறு?

கடற்கரையிலிருந்து மீன் தொழிலில் ஈடுபடும், சாதாரணமாக கலங்களைப் பயன்படுத்தாத, மூழ்கி மீன் பிடிப்பவர்கள் (divers), கரைவலைகளை இயக்குபவர்கள், கடல்பாசி சேகரிப்பவர்கள், கரையிலிருந்து செயல்படும் வலைகளால் மீன்பிடிப்பவர்கள் மற்றும் இதர கரை சார்ந்த மீன்பிடி சாதனங்களை இயக்குபவர்கள், அலையேற்றயிறக்கப் பரப்பில் நின்று மீன்பிடிப்பவர்கள், முழு நேர மீன்பிடியில் ஈடுபட்டிருந்தாலும், அவர்கள் முதலாளி-தொழிலாளி என்ற விசேஷ உறவுநிலையில் இருந்தாலும் மீன் தொழிலில் வேலை நடைமுறை பற்றிய பொதுப்புரிதல் உடன்படிக்கை, 2007ல் சொல்லப்படும் ‘மீனவர்’ என்ற வரையறையிலிருந்து விலக்கிவைக்கப்பட்டுள்ளனர்.

## மீன்பிடித் தொழிலில் வேலை நடைமுறை பற்றிய பொதுப்புரிதல் உடன்படிக்கை, 2007 மூலம் மீனவர்களுக்கு என்னென்ன பலன் கிடைக்குமோ அவற்றை ஒத்த பலன்களை கடற்கரையில் மீன் பிடிக்கும் மீன்வர்களுக்கும் கிடைக்கச் செய்ய மீனவ மற்றும் சமூக அமைப்புகள் என்ன செய்யலாம்?

கலங்களில் சென்று மீன்பிடிக்காத, முழு நேர மீனவர்களான, மூழ்கி மீன் பிடிப்பவர்கள் (divers), குழி உடலிகளைப் பொறுக்குபவர்கள், கரைவலைகளை இயக்குபவர்கள், மீன்பிடி தொடர்பான உபதொழில்களில் உள்ளவர்கள், குறிப்பாக, மீன்பிடித் தொழிலில் அதிக அளவு ஈடுபட்டுள்ள பெண்கள் ஆகியோரும் மீன்பிடித் தொழிலில் வேலை நடைமுறை பற்றிய பொதுப்புரிதல் உடன்படிக்கை, 2007ன் பரப்பெல்லைக்குள் வருவதற்காக அரசின் கவனத்தை ஈர்ப்பதற்காக தேசிய அளவிலான பிரச்சார இயக்கங்களில் ஈடுபட வேண்டும். (அ) மூழ்கி மீன் பிடிப்பவர்கள் (divers), அபாயகரமான கடற்கரைகளில் கரைவலைகளை இயக்குதல், அல்லது சிப்பிகள் சேகரித்தல் போன்ற ஆபத்தான தொழில்களில் ஈடுபட்டுள்ளவர்கள் (ஆ) (பணி ஒப்பந்தம், ஒய்வு நேரம், சம்பளம் வழங்கும் முறை போன்ற) பணிநிலைமைகள், (இ) பணியிடப் பாதுகாப்பு மற்றும் ஆரோக்கியப் பாதுகாப்பு (உ) மருத்துவம் மற்றும் சமூகப் பாதுகாப்பு ஆகியவை கரைசார்ந்த மீன்பிடித் தொழிலில் உள்ளவர்களுக்கு உதவியாக இருக்கும்.

# முன்னுள்ள பாதை

முன்னுள்ள பாதை


உணவு

## மீன்பிடித் தொழிலில் வேலை நடைமுறை பற்றிய பொதுப்புரிதல் உடன்படிக்கை, 2007-யை நிறைவேற்றவும் அதனை நடைமுறைபடுத்தவும் உறுப்பு நாடுகள் செய்ய வேண்டும் என்று எதிர்பார்க்கப்படுபவை எவை?

மீன்பிடித் தொழிலில் வேலை நடைமுறை பற்றிய பொதுப்புரிதல் உடன்படிக்கை, 2007-யை அங்கீகரிக்கும் நாடுகள் ஏன் சில வகையின மீனவர்களை உள்ளடக்கவில்லை, விலக்கப்பட்ட வகையினத்தைச் சேர்ந்தவர்களுக்கு, அதற்கு இணையாக வேறுதிட்டங்கள் அளிக்கப்பட்டுள்ளனவா என்பன பற்றி ILOவிற்கு அறிக்கை அளிக்க வேண்டும். மீன்பிடிக் கலங்கள் தேவையான, பாதுகாப்பான பயணம் மற்றும் செயல்பாடு மேற்கொள்ளும் அளவுக்கு ஆட்கள் அமர்த்தப்பட்டுள்ளனரா? மீனவர்களின் பாதுகாப்பு மற்றும் ஆரோக்கியத்திற்கான ஏற்பாடுகள் ஆகியவை குறித்தும் அறிக்கை அளிக்க வேண்டும். அவற்றுடன், பின்வருவன பற்றி தர நிர்ணயங்களை மேற்கொள்ள வேண்டும்:

- மீனவர்களின் பாதுகாப்பு மற்றும் ஆரோக்கியத்திற்கு ஏற்ற வகையில் போதுமான ஓய்வு காலம்
- மீனவர்களுக்கு முறையான கால இடைவெளியில் சம்பளம் அளிப்பதற்கான ஏற்பாடு
- கலங்களில் போதுமான அளவிலான, தரமான தங்குமிட வசதி
- அவசரகாலக் மருத்துவ உதவி அளிக்கும் பயிற்சி பெற்ற குறைந்தது ஒரு மீனவர் உட்பட மருத்துவ வசதி
- கரையில் மீனவர்கள் சிகிச்சை பெறுவதற்கான உரிமையை அங்கீகரிப்பது
- கலத்தில் பணிபுரியும்போது ஏற்படும் சுகவீனம், பணி தொடர்பான அபாயம்/ நோய்கள் ஆகியவற்றை எதிர்கொள்வதற்கான ஏற்பாடு
- போதுமான தரமுள்ள, அளவுள்ள நீர் மற்றும் உணவை மீன்பிடி கலத்தில் பணிபுரிவோருக்கு வழங்குவது
- அனைத்து மீன்பிடி சாதனங்களை இயக்கவும் அவர்கள் ஈடுபடும் மீன்பிடி செயல்பாட்டிலும் மீனவர்களுக்குப் பயிற்சி வழங்குவது
- மீன்பிடிக் கலத்தில் ஏற்படும் விபத்துகள் பற்றி அறிக்கை அளிப்பது புலனாய்வு செய்வது
- மீனவர்களும் அவர்களைச் சார்ந்தவர்களும் சமூகப் பாதுகாப்பு திட்டங்கள் பெறுவதை உறுதி செய்வது

- பணியிடம் மற்றும் தங்குமிடம் தொடர்பான இந்தப் பொதுப்புரிதல் உடன்படிக்கையிலுள்ள விதிகளுக்குக் கீழ்படுவது குறித்து ஆய்வு செய்யப் பட்டு அதற்கான ஆவணத்தைக் வைத்திருப்பது.

மீன்பிடித் தொழிலில் வேலை நடைமுறை பற்றிய பொதுப்புரிதல் உடன்படிக்கை, 2007ன் விதிகளுக்குக் கீழ்படுவதைப் பொருத்தவரை கலம் பதிவு செய்யப்பட்ட நாடு அதற்கான ஆய்வு, அறிக்கை அளித்தல், கீழ்படுவதைக் கண்காணிப்பது, தவறும் பட்சத்தில் தண்டம் விதிப்பது, சரிசெய்வதற்கான நடவடிக்கைகள் எடுப்பது ஆகியவற்றை மேற்கொள்ள வேண்டும். மேலும் கலம் வந்து சேரும் துறைமுக நாடு பொதுப்புரிதல் உடன்படிக்கையின் வாசகங்களை நிறைவேற்றாத கலம் என்றால், அந்த நாடு கலம் பதிவு செய்யப்பட்ட நாட்டுக்குத் தகவல் அளிக்க வேண்டும் என்பதற்கான வாசகங்களும் பொதுப்புரிதல் உடன்படிக்கையில் உள்ளன.

மேலும் அந்த துறைமுக நாடு, கலத்தில் இருக்கும் மீனவர்களுக்கு அபாயகரமான அம்சங்களை சரிசெய்ய தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளவும் செய்யலாம்.

## மீன்பிடித் தொழிலில் வேலை நடைமுறை பற்றிய பொதுப்புரிதல் உடன்படிக்கை, 2007-ன் வாசகங்களை வளரும் நாடுகள் நடைமுறைபடுத்த ஏதேனும் சிறப்பு ஏற்பாடுகள் இருக்கின்றனவா?

'முன்னோக்கிய அணுகுமுறை' வளரும் நாடுகளுக்கு கூடுதல் நெகிழ்வுத் தன்மையை குறிப்பாக, இந்தப் பொதுப்புரிதல் உடன்படிக்கையின் பரப்பெல்லைக்குள் வரும் மீன் பிடி கலங்களையும் மீனவர்களையும் வகையினப்படுத்துவதில், அளிக்கிறது.

## மீன்பிடித் தொழிலில் வேலை நடைமுறை பற்றிய பொதுப்புரிதல் உடன்படிக்கை 2007 நடைமுறைபடுத்தப்-படுவதை உறுதிசெய்ய மீனவ அமைப்புகளும் சமூக அமைப்புகளும் என்ன செய்யலாம்?

மீன் தொழிலில் வேலை நடைமுறை பற்றிய பொதுப்புரிதல் உடன்படிக்கை, 2007 தேசிய அளவில் அங்கீகரிக்கப்படுவதற்கான பிரச்சாரத்தில் ஈடுபடலாம், பொருத்தமான மட்டங்களில் சட்டங்களைக் கொண்டுவருவதற்கும் மேம்படுத்துவதற்கும் முயற்சி எடுப்பது இந்த பொதுப்புரிதல் உடன்படிக்கை

நடைமுறையாவதற்கு முக்கியமானதாகும். இந்தப் பொதுப்புரிதல் உடன்படிக்கையின் பரப்பெல்லைக்குள் கொண்டுவர வேண்டிய அல்லது குறுகிய காலத்துக்கு விலக்கி வைக்கப்பட வேண்டியவை அல்லது மீனவர்கள் குறித்து சம்பந்தப்பட்ட அதிகார அமைப்பு, வேலையளிப்பர் சங்கங்கள், தொழிலாளர் சங்கங்கள் மத்தியில் ஆலோசனை நடத்துவது பங்கேற்பு முறையில் தேசிய பிரச்சாரம் மேற்கொள்வது முக்கியமானதாகும். தேவையெனில் உதாரணமாக, அளவு என்ன என்பதைக் கருத்தில் கொள்ளாமல், ஏழு நாட்களுக்கு மேலான மீன்பிடி பயணத்தை மேற்கொள்ளும் கலங்களையும் கண்டத்திட்டுக்கு வெளியே அல்லது 200 கடல்மைல்களுக்கு மேல் பயணப்படும் கலங்களையும் இனம் காண வேண்டும். மேலும், 24 மீட்டர் நீளத்திற்குக் குறைவான எந்த கலங்கள் மற்றும் அந்தக் கலங்களில் பணியாற்றும் மீனவர்கள், இந்த பொதுப்புரிதல் உடன்படிக்கையின் பரப்பெல்லைக்குள் கொண்டுவரப்பட வேண்டும் என்பது, மற்ற அம்சங்களையும் உள்ளிட்டு மீன்பிடி பயணத்தில் கால நீட்சியையும் மீன்பிடிக்கப்படும் பகுதியையும் மீன்பிடி செயல்பாட்டின் வகையினத்தையும் சார்ந்ததாகும்.

மீனவர்கள் மற்றும் மீன்பிடிக் கலங்களை விலக்கி வைப்பது மற்றும் உடன்படிக்கையின் வாசகங்களில் விதிவிலக்குகளை மேற்கொள்வதற்கு முயற்சிகளும் மேற்கொள்ளப்பட வேண்டும். அனைத்து மீனவர்களுக்கும் பொருந்தக் கூடிய உடன்படிக்கை வாசகங்களை இனம் காண்பதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டும். உதாரணமாக, குறைந்தபட்ச வயது, முறையான காலத்தில் ஊதியம் வழங்குவது, சமூகப் பாதுகாப்பு போன்றவை அனைத்து மீனவர்களுக்கும் பொருந்துவதாகும்.

பல வளரும் நாடுகள் மிக மோசமான அடிக்கட்டுமான வசதிகளையும் பலவீனமான நிறுவனங்களையும் கொண்டுள்ளன. மீன்பிடித்துறை, கடல்சார் மீன்பிடி பாதுகாப்பு அதிகார அமைப்பு, தொழிலாளர் நிர்வாகம் போன்றவற்றை மறுதிசை வழிப்படுத்துவது அல்லது முறைப்படுத்துவது அரசின் அமுலாக்க ஆற்றலை அதிகப்படுத்த உதவும். இதுபோன்ற மாற்றங்களின் மூலம் மட்டுமே மீன் தொழிலில் வேலை நடைமுறை பற்றிய பொதுப்புரிதல் உடன்படிக்கை, 2007ன் வாசகங்களை வளரும் நாடுகள் நடைமுறைபடுத்த முடியும். மேலும், இதுவரை வளரும் நாடுகளில் வெகு அரிதாக மேற்கொள்ளப்பட்ட 24 மீட்டருக்குக் குறைவான நீளமுள்ள கப்பல்கள் மற்றும் மீனவர்களை தொழிலாளர் நோக்குநிலையில் பார்ப்பதற்கான ஆற்றலை அளிப்பதாகவும் இருக்கும். 

# முடிவுரை



**இறுதியாக சில கருத்தாக்கங்கள்**

மீனவர்களுக்கு வேலைக்கொடுப்பது, கலத்தில் உள்ள மீனவர்களின் பணி மற்றும் தங்குமிட நிலைமையை மேம்படுத்துவது, சமூகப் பாதுகாப்பு அளிப்பது போன்ற மீன்பிடித்துறையின் தொழிலாளர் தரநிர்ணயத்தில் மிகக் கேந்திரமான அம்சங்களை மீன் தொழிலில் வேலை நடைமுறை பற்றிய பொதுப்புரிதல் உடன்படிக்கை, 2007 அளிக்கிறது. உலகெங்கும் உள்ள பெருவீத மற்றும் சிறுவீத கலங்களில் மனித நேயமற்ற பணிநிலைமைகளில் பணிபுரியும் மீனவர்களைப் பாதுகாக்கவும், பணி/ தங்குமிட நிலைமைகளை மேம்படுத்தவும் இந்த உடன்படிக்கை உதவியாக இருக்கும். மீன்பிடித்துறை கமிட்டியிடம் 2004ல் பேசிய ILCயின் தலைமைச் செயலாளர் பின்வருமாறு கூறினார்: ”எந்தவொரு தனிப்பட்ட மீனவரும் இந்த பொதுப்புரிதல் உடன்படிக்கையின் பாதுகாப்பு வலையிலிருந்து நழுவிவிடாதிருப்பது மிக முக்கியமானதாகும்... இதனை எட்ட வேண்டும் என்றால், வலையின் கண்ணிகள் மிகச் சரியான அளவில் இருக்க வேண்டும். கண்ணி மிகப் பெரியதாக இருந்தால் அனைத்தும் விலக்களிக்கப்பட்டுவிடும். கண்ணி மிகச் சிறியதாக இருந்தால் அங்கீகரிப்பதும் நடைமுறைபடுத்துவதும் குறைந்துபோய்விடும்”மீன்பிடித் தொழிலில் வேலை நடைமுறை பற்றிய பொதுப்புரிதல் உடன்படிக்கை, 2007-யை உலகமெங்கும் நடைமுறைபடுத்த அரசுகளும், மீனவர் மற்றும் வேலையளிப்போர் அமைப்புகளும், தொண்டு நிறுவனங்களும் ஒன்று சேர்ந்து பணியாற்றியாக வேண்டும்.

— மீனவத் தொழிலாளர்களுக்கான சர்வதேச
ஆதரவுக் குழுவின் தயாரிப்பு (ICSF)

www.icsf.net
icsf@icsf.net

# மீன்பிடித் தொழிலில் வேலை நடைமுறை பற்றிய பொதுப்புரிதல் உடன்படிக்கை, 2007

சர்வதேச தொழிலாளர் அமைப்பின் (International Labour Organization -ILO) 96-வது சர்வதேச தொழிலாளர் மாநாடு (International Labour Conference -ILC) ஜூன் 2007ல் சுவிட்சர்லாந்தின் ஜெனிவா நகரில் நடைபெற்றது. மீன்பிடித் தொழிலில் வேலை நடைமுறை பற்றிய பொதுப்புரிதல் உடன்படிக்கை 2007 (Work in Fishing Convention, 2007) அந்த மாநாட்டில் நிறைவேற்றப்பட்டது. அந்த பொதுப் புரிதல் ஒப்பந்தம் பற்றிய விரைவான ஒரு பார்வை அளிப்பதற்கு இந்த வழிகாட்டி நூல் முயற்சிக்கிறது. பொதுப்புரிதல் ஒப்பந்தத்தின் வாசகங்கள் எந்த ஒன்றிற்கும் விளக்கம் அளிப்பதற்கு இந்த வழிகாட்டி முயற்சி எடுக்கவில்லை. பொதுப்புரிதல் ஒப்பந்ததின் எந்தவொரு வாசகத்திற்கும் பதிலாக இதில் உள்ள வாசகங்களைக் கொள்ளக் கூடாது. பொதுப்புரிதல் ஒப்பந்தம், ILO மற்றும் ILCயின் வேலை நடைமுறை பற்றிய விவரம் அறியாதவர்கள் சம்பந்தப்பட்ட விஷயங்கள் குறித்து ஓரளவு புரிதலை எட்டுவதற்கு உதவி செய்வதே இந்த வழிகாட்டு நூலின் நோக்கமாகும். பாரம்பரிய மீனவர்களுக்கும் சிறு வீத மீன்பிடியில் ஈடுபட்டுள்ளோர்களுக்கும் இந்தப் பொதுப்புரிதல் உடன்படிக்கை என்ன பலன்களைச் சாத்தியமாக்கக்கூடும் என்பதை மீனவ தொழிலாளர்களும் அவர்களின் அமைப்புகளும் புரிந்துகொள்ள இந்த வழிகாட்டு நூல் உதவியாக இருக்கும் என்று நம்புகிறோம்.

இந்த வழிகாட்டியை www.icsf.net என்ற இணையதளத்திலும் உள்ளது.

ISBN 978-93-80802-16-9

www.icsf.net